பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 8 (23—11—68) சனி ★ வெளியூர்: கார்த்திகை 9 (24—11—68) ஞாயிறு [இதழ்: 132

## 26 பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம் மறுப்பு

"அரசு விளம்பரம் மறுக்கப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை 26-க்கு உயர்ந்துவிட்டிருக்கின்றன"

என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"விரும்பத்தகாத முறையில் எழுதப்படும் பத்திரிகைகட்கு விளம்பரம் தருவதில்லை என்று அரசு இதுவரையில் கடைபிடித்த கொள்கையையொட்டியே இவைகளுக்கு விளம்பரம் தருவது நிறுத்தப்பட்டது" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# தமிழக மக்கள் குறுகிய நோக்கு கொண்டவர்களல்லர்

## 'ஏனைய மாநிலத்தவர் இங்கு அமைதியுடன் வாழ்வதே இதற்குச் சான்று'

## 'தமிழ் மொழி ஆழ்த்தப்படும்போதுதான் போராட்டத்திற்கு வழிகோலப்படுகிறது'

### மக்களவையில் வெ. கிருட்டிணமூர்த்தி விளக்கம் --- 'தமிழ் நாடு' மசோதா ஒருமனதாக நிறைவேற்றம்

புதுடில்லி, நவ. 22—

'சென்னை ராஜ்யம்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யும் மசோதா, மக்களவையில் ஒருமனதாக நிறைவேறியது. அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இப்படி ஒரு மசோதாவை, அவையின் எல்லாத் தரப்பினரும், கட்சி -- மொழி வேறுபாடின்றி ஆதரித்திருப்பதானது, மக்களவையில் மிக அரிதாக நடைபெற்றதோர் நிகழ்ச்சியாகும்.

மசோதாமீது பேசிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் -- குறிப்பாகக் கழக உறுப்பினர்கள் -- உள்துறை அமைச்சரையும், மத்திய அரசையும் உளமார்ந்து பாராட்டினர்.

கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், 'எனது மாநில மக்களின் விருப்பத்தை நிறைவேற்றிய இந்த அரசினைப் பாராட்ட எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை' என்று குறிப்பிட்டார்; மேலும் அவர், 'மாநிலங்களுடன் மத்திய அரசு தனது உறவை எப்படிப் பலப்படுத்துவது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்; பாரதியார் இன்று உயிரோடு இருந்திருப்பாரானால், அவர், ஆயிரம் கவிதைகளைப் பாடியிருப்பார்; தமிழ்நாட்டு மக்கள் குறுகிய மனப்பான்மையுடையவர்கள் அல்லர்; ஏனைய மாநிலத்தவர்கள் அங்கே அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கிறார்கள்; ஒரு மாநிலத்தின் மொழி ஆழ்த்தப்படும்போது மட்டும்தான் அங்கு ஒரு போராட்டம் ஆரம்பமாகிறது' எனச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

**எதிர்பாராதவிதமாக இந்த மசோதாவைப் பாராட்டும் வகையில் அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் குறுக்கிட்டுப் பேசினார்; இது, வழக்கத்துக்கு மாறானதாகும்; ஏனெனில், தனக்குச் சம்பந்தமில்லாத ஓர் இலாகாவின் விவாதத்தில் எந்த அமைச்சரும் கலந்து கொண்டு பேசுவதில்லை.**

அமைச்சர் ராவ் பிறந்தது தமிழ்நாட்டில் -- பேசுவது கன்னடம் -- படித்தது மாராட்டிரத்தில் -- பணிபுரிவது டெல்லியில்; ஆகையால், தாம் இவ்விவாதத்தில் கலந்துகொள்வதில் பொருத்தமிருப்பதாக அவர் கருதினார்.

அவர் பேசுகையில், தஞ்சையில் மராத்தி மொழி பேசுவோரும், மதுரையில் குசராத்தி மொழி பேசுவோரும், மற்றும் பரவலாக இந்தி -- சிந்தி -- பிற மொழிகள் பேசுவோரும் ஒற்றுமையுடன் தமிழ்நாட்டில் வாழ்ந்து வருவதையும், தி. மு. கழகத்திலேயே தெலுங்கு பேசுவோர் இருப்பதையும் எடுத்துக்காட்டி, தமிழக மக்களைப் புகழ்ந்து பாராட்டினார்.

**இந்த நேரத்தில் கழக உறுப்பினர் சே. கந்தப்பன், 'இராமேசுவரம் கோயிலில் தலைமைப் பூசாரி மாராட்டியத்தைச் சேர்ந்த ஒரு பிராமணராவார்' என்பதை நினைவூட்டினார்.**

மசோதாவில் விவாதத்திற்குரிய அம்சம் ஏதும் இல்லாதிருந்தும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் பேச ஆவல் கொண்டிருந்தனர்; அவர்கள் அனைவரும் இம் மசோதாவைப் பாராட்டினர்.

ஜன சங்க உறுப்பினர் ஜெகநாத ராவ் ஜோஷி, ஷேக்ஸ்பியரின் கவிதையிலிருந்து மேற்கோள்களைக் காட்டி, 'ஒரு பெயரில் எல்லாம் இருக்கிறது' என்று எடுத்துக் கூறினார்; 'இதுபோல் 'நாகாலாந்து' என்பதனை நான் விரும்பவில்லை; 'நாக பூமி'-நாகா பிரதேசம்' என அழைப்பது நன்றாக இருக்கும்' என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

"மைசூரை 'கருநாடகம்' என்றும், 'கேப் கொமரின்' என்பதை கன்னியாகுமரி என்றும் அழைக்கும் அந்த நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்றும் அவர் விருப்பம் தெரிவித்தார்

### சவான் பாராட்டு

விவாதத்திற்குப் பதிலளித்த உள்துறை அமைச்சர் சவாண், தமிழ்நாட்டையும், தமிழ் மொழியையும் புகழ்ந்து பாராட்டினார்; அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

**"எனது கல்லூரி நாட்களில் நான் ஒரு தடவை விரிவுரையாளர் ஒருவரின் தமிழ்ப் பேச்சைக் கேட்டேன்; தமிழின் ஓசை நயம், அது ஓர் இனிமையான மொழி என்பது அப்போதே எனது மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது.**

**"இந்த மசோதா நிறைவேறுவது நாட்டின் ஒருமைப்பாடில் மேலும் ஒரு படி முன்னேற்றமாகும்.**

**"இந்தப் பெயர் மாற்றம் ஒரு புதிய சரித்திரத்தைத் துவக்கமாகக் கொள்ளக்கடவும். மக்களின் உள்ளத்திலும், பெருமையிலும் இது ஒன்றிணைந்து செயல்படட்டும்; நாட்டின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை இது உருவாக்கட்டும்."**

அமைச்சரின் பேச்சுக்குப் பிறகு மசோதா ஓட்டுக்கு விடப்பட்டது; யாரும் எந்தத் திருத்தமும், வாக்கெடுப்பும் கோராததனால், குரல் வோட்டு மூலமே மசோதா நிறைவேறியது

அவையின் எல்லாத் தரப்பிலிருந்தும் கிடைத்த மிகப் பெரிய வரவேற்புக்கு இது ஒரு சான்று; ஏனெனில் இப்படி நடைபெறுவது மிக அரிதாகும்.

## காளீசுவரா ஆலை

கோயமுத்தூர், நவ 22—

கோவை காளீசுவரர் ஆலையை மீண்டும் திறக்க நிர்வாகிகளுக்கும்--தொழிலாளர் சங்கங்களுக்கு மிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஒப்பந்தப்படி ஆலை வாரத்திற்கு 7-நாட்களும் ஓடும்.

## 'மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கு பெறுவதாக மக்கள் கருதுகின்றனர்'

## 'சூதாட்டமாகப் பரிசுச் சீட்டைக் கருதவில்லை'

### மக்களவையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் விளக்கம்

புதுடில்லி, நவ. 23—

"வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்காக எந்த மாநிலமாவது பரிசுச் சீட்டுகளை நடத்தினால், அரசியல் சட்டப்படி அதனை மத்திய அரசு தடை செய்ய இயலாது"

என்று மக்களவையில், உள்நாட்டுத்துறை துணையமைச்சர் வி. சி. சுக்ளா கூறினார். அவர் மேலும் விளக்கியதாவது:—

"மாநிலங்கள் பரிசுச் சீட்டுகள் நடத்தாமல் தடுக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு, ஒரு கட்டுப்பாட்டைத்தான் விதிக்க இயலும்; அதாவது, பரிசுச் சீட்டுகளை நடத்தும் ஒரு மாநிலமானது வேறொரு மாநிலத்தில் --- அந்த மாநிலத்திடமிருந்து முன்னதாகவே ஒப்புதலைப் பெறாமல் தன்னுடைய பரிசுச் சீட்டுகளை விற்கக்கூடாது என்பதே இந்தக் கட்டுப்பாடாகும். இந்தக் கட்டுப்பாட்டை விதிக்க மத்திய அரசுக்கு இயலும் வகையில், இ. பி. கோ. 294 (ஏ) பிரிவைத் திருத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

பி. சி. வர்மா:—"பரிசுச் சீட்டுகளை நடத்துவது, கொள்ளை -- சூதாட்டத்தைப் போன்றதாகும்; எனவே, மாநிலங்கள் பரிசுச் சீட்டு நடத்தாமல்மத்திய அரசு தடுக்குமா?'

துணையமைச்சர்:—"உயர் கட்டத்தில் இதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது; 'பரிசுச் சீட்டு நடத்த மாநிலங்களுக்கு உள்ள உரிமைகளையும் அதிகாரங்களையும் கட்டுப்படுத்த முடியாது' என்று அப்போதே தெரியவந்தது; பரிசுச் சீட்டு நடத்துவதா இல்லையா என்பதை, அந்தந்த மாநில அரசுகள்தான் முடிவு செய்யவேண்டும்; இத்துறையில் மாநில அரசுகளின் கொள்கைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள இயலாது."

செ. கந்தப்பன்:— **"இதுவரையில் தமிழ்நாட்டில் இரண்டு பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடைபெற்றிருக்கிறது; சூதாட்டமாக இதை மக்கள் கருதவில்லை; மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்வதாகவே கருதுகின்றனர்; இந்த பரிசுச் சீட்டு முறைக்கு அநாவசியமான எதிர்ப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்."**

# நீர்ப்பாசனமே தமிழகத்திற்குப் பெரும் பிரச்சினையாகும்

## ஊற்று நீரைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு மின்சார இயந்திரம் அவசியம்

### இன்றியமையாத் தேவைகள் --- உலக பாங்கி தலைவரிடம் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, நவ. 28—

ஒரே ஒரு நாள் சென்னைக்கு வந்து அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் பேச்சு நடத்திய உலக பாங்கியின் தலைவர் இராபர்ட் மக்நமாரா, தமிழ்நாட்டின் முன்னேற்றம் பற்றி மனநிறைவுடன் திரும்பியிருக்கிறார்.

முதலமைச்சர் அண்ணா அவர்களை நுங்கம்பாக்கத்தில் அவரது இல்லத்தில் சந்தித்த மக்நமாரா, 'உங்களுடைய நெருக்கடி என்ன?' என்று அண்ணா அவர்களிடம் குறிப்பிட்டுக் கேட்டார்; உடனே அண்ணா அவர்கள், சில பிரச்சினைகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கூறியதாவது:—

"நீர்ப் பாசனம்தான் எங்களுக்குப் பெரிய பிரச்சினையாகும். தமிழகத்தில் காவிரி மட்டும்தான் பெரிய ஆறு ஆகும். இது ஏற்கனவே தஞ்சைப் பகுதிக்கும், நீர்ப் பாசன வசதியை மட்டுமே நம்பியிருக்கும் இதர மாவட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பூமிக்குக் கீழுள்ள ஊற்று நீரைப் பயன்படுத்துவதென்றால், விசைத் துரப்பணங்கள், பம்பு செட்டுகள், மின்சார இயந்திரங்கள் ஆகியவை விவசாயிகட்கு மிக அதிகமாக உதவவேண்டியிருக்கிறது.

தஞ்சைப் பகுதியில்கூட ஊற்று நீரைக் கண்டுபிடித்து கூடிய வரையில் பயன்படுத்த முயற்சிகள் நடைபெறுகிறது. தண்ணீர் தேங்காதபடி பார்த்துக் கொள்ள வடிகால் திட்ட வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

கிடைக்கும் நீர்வளத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; இதற்காக விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது; அதைச் செயல்படுத்தியாக வேண்டும்.

இன்னொரு பிரச்சினை, விவசாய உற்பத்திப் பொருட்களை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று இலாபகரமாக விற்கும் பொருட்டு, போக்குவரத்துக்கான பாதைகளைச் செப்பனிடுவதாகும்.

மாநிலத்தின் உர விநியோக நிலைமை இப்போதைக்குத் திருப்திகரமாக உள்ளது; ஆயினும் தேவையின் அளவு இன்னும் உயரக்கூடும்.

தூத்துக்குடியில் ஓர் உர ஆலையை அமைப்பதும், தூத்துக்குடித் துறைமுகத்தை வளர்ச்சியடையச் செய்வதும், பொதுவாகப் பின்தங்கிக் கிடக்கும் மாநிலத்தின் தென் வட்டாரத்தை வளர்ச்சியடையச் செய்யும்."

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 8 (23-11-68) சனி

# அற்ப மகிழ்ச்சி!

அனைத்திந்திய அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருப்பது காங்கிரசுக் கட்சியாகும். ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து -- இத் துணைக் கண்டத்தை அடிமைப்படுத்தி ஆட்சி செய்யத் துவங்கிய காலத்திலிருந்து---அரசியல் கட்சி என்று சொல்லத்தக்கதாக வடிவெடுத்து வளர்ச்சி பெற்ற காங்கிரசுக் கட்சி, 'இந்நாட்டின் விடுதலை இயக்கம்' என்ற பெரும்பேற்றுக்கும் தன்னை இலக்காக்கிக்கொண்டு வளர்ந்தது. இக்கட்சியின் காலப்போக்கான வளர்ச்சியில், நாட்டு விடுதலையே முன்னணிப் பிரச்சினையாகவும், மற்ற அனைத்தும் பின்னர் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்றும், அக்கட்சியால், மிகத் தீவிர பிரச்சாரமாக மேற்கொள்ளப்பட்டது,

இப்படிப்பட்ட நிலையில், வேறு எந்தப் பிரச்சினையும் நாட்டு மக்களின் சிந்தனையில் இடம் பெற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. வளர்ந்துவரும் விடுதலை இயக்கமாக விளங்கிய காங்கிரசு இயக்கம், தன்னகத்தே தலைசிறந்த பல தலைவர்களைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

பற்பல தலைவர்களைப் பெற்றிருந்த அக்கட்சி, ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் பற்பல போராட்டங்களையும் மேற்கொண்டு நடத்தியதை நாட்டு வரலாற்றை அறிந்தவர்கள் உணருவார்கள். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், நாட்டு மக்களின் சிந்தனையில் கொலுவீற்றிருந்த 'ஒளிமயமான' செயல்கள் எல்லாம், 'விடுதலைப் போர்' என்பதொன்றே ஆகும். அவர்களின் சிந்தனை வேறு எதைப் பற்றியும் சிந்திக்கத்தக்க நிலையில் இல்லை -- சிந்திப்பதற்கும் நேரம் இல்லை -- சிந்திக்கவும் காங்கிரசுக் கட்சி விடவில்லை. அந்த அளவுக்கு அக்கட்சி 'மிகப் பிரகாசமாய்' ஒளிக்கதிர்களை மக்கள் கண்கள்மீது வாரி இறைத்துக் கொண்டிருந்தது. இதன் விளைவாக, 'எதிர்க் கட்சி' என்ற அமைப்பு அக்காலத்தில் உருவாவதற்குரிய வாய்ப்பு அறவே இல்லாமல் போய்விட்டது. 'எதிர்க் கட்சி' என்று கூறுவதற்குரிய 'இலக்கண வடிவு' கொண்ட ஒரு அமைப்புகூடப் பலம்பெற முடியாமல் போய்விட்டது. மேலும், 'எதிர்க் கட்சி' என்று கூறுவதற்கே பொருள் இல்லாமலும் இருந்தது. 'யாருக்கு எதிராக --- எந்தக் கொள்கைக்கு எதிராக --- எந்த இலட்சியத்தைப் பேணிக் காத்து வர' என்ற அடிப்படைப் பிரச்சினைக்கே இடமில்லாமல் போய்விட்டபடியால், எதிர்க் கட்சியின் 'அவசியத் தேவை' என்பதுகூட மறக்கப்பட்ட ஒன்ருகப் போய்விட்டது.

இப்படிப்பட்ட பின்னணியில்தான் காங்கிரசுக் கட்சி, முதல் பொதுத் தேர்தலில் வெற்றி முழக்கமிட்டு, 'காணுமிடமெல்லாம் காங்கிரசு வெற்றி பெற்றது' என்று முரசுகொட்டி அரசுக் கட்டிலில் ஏறியது.

நடைமுறையில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், அவர்கள் ஆட்சியில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, மிக எச்சரிக்கையாக மேற்கொள்ளப்பட்ட பணி அரசியல் கருச் சிதைப் பாகும். 'எதிர்க் கட்சி' என்று ஏதாவது ஒன்று வடிவெடுக்காதபடி பார்த்துக்கொள்ளும் பணியை மிக விழிப்போடும் மிக்கத் திறமையோடும் மேற்கொண்டனர். ஆனுல், அவை அனைத்தையும் மீறி, காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய சில தலைவர்களின் அரிய முயற்சியால் எப்படியோ ஒன்றிரண்டு கட்சிகள் உதயமாகத் தொடங்கின. இவைகள்கூட, அனைத்திந்திய அளவில் பலம் மிக்க எதிர்க் கட்சிகளாக விளங்க முடியவில்லை. ஒன்றிரண்டு மாநிலங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் அவைகள் செல்வாக்குப் பெற்றிருந்தனவே தவிர, பரவலாக அனைத்திந்தியா முழுவதும் வளர்ச்சி பெறவில்லை.

கம்யூனிஸ்டுக் கட்சி அத்தகைய இடத்தைப் பெறும் வாய்ப்பை ஒரு நேரத்தில் பெற்றிருந்தது ; ஆனுல், அக்கட்சியின் சில பல தவறுகளால், பெற்ற வாய்ப்பை இழக்க நேர்ந்துவிட்டது.

ஆகமொத்தத்தில் இன்றளவும், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக அனைத்திந்திய அளவில், பலம் பொருந்திய ஒரே அரசியல் கட்சி எதுவும் உருவாக அமையவில்லை ; அப்படி உருவெடுப்பதையும் காங்கிரசுக் கட்சி விரும்பவும் இல்லை ; அதனை அழிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தது -- வருகிறது. இதற்காகக் கையாளப்பட்ட -- படும் முறைகள் பற்பலவாகும்.

இப்பின்னணியைக் கருத்தில் கொண்டு நோக்கினுல், பல மாநிலங்களில், எதிர்க் கட்சிகள் ஒன்றிரண்டு காங்கிரசுக் கட்சியை எதிர்த்து நிற்கும் சக்தி படைத்ததாக வளர்ந்திருப்பது, 'மிகப் பெரும் சாதனை' என்பதை அரசியல் அறிவுத்திறன் படைத்த எவரும் ஒப்புவர்.

மாநில அளவில்கூட எந்தக் கட்சியும், பெயரளவிற்கும் 'எதிர்க் கட்சி' என்ற நிலையைக்கூட அடையாத சிற்சில மாநிலங்கள் இந்தியாவில் இன்னும் இருக்கின்றன. இப்படிப்பட்ட மாநிலங்களில் ஒன்று மைசூர் மாநிலமாகும். இம்மாநிலத்தில், 'எதிர்க் கட்சி' என்று பெயரளவில் சொல்லுவதற்குத் தகுதி படைத்த கட்சிகூட செம்மையாக அமையவில்லை. காங்கிரசுக் கட்சியிலிருந்து பிரிந்துபோன ஒன்றிரண்டு தலைவர்களால் உருவான பிரஜா சோஷலிஸ்டுக் கட்சிதான் அங்கு 'எதிர்க் கட்சி' என்பதாக இருந்துவருகிறது.

மைசூர் மாநிலம் பல்வேறு துறைகளில் பின்தங்கியிருப்பதைப் போல், அரசியல் துறையிலும் பின்தங்கிய மாநிலம் என்பதை அம்மாநிலத்தைப் பற்றி அறிந்த எவரும் ஒப்புவர். இப்படிப்பட்ட ஒரு மாநிலத்தில் நிகழ்வுற்ற ஒரு துணைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்றுவிட்டதாம் ; அதுவும், நான்கு பேர் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டும்கூட காங்கிரசு வெற்றி பெற்றுவிட்டதாக மனமகிழ்ச்சி கொண்டு களிமயக்கத்தில் ஆழ்ந்து துள்ளுகின்றனர் காங்கிரசார்.

காங்கிரசை எதிர்த்து நின்ற நால்வரும் பெற்ற வாக்குகள் 16,977 ; காங்கிரசு பெற்ற வாக்குகள் 16,870. காங்கிரசுக்கு எதிராக விழுந்த வாக்குகள் 16,977 ; அதாவது, காங்கிரசு பெற்ற வாக்குகளைவிட, காங்கிரசுக்கு எதிரான வாககுகள் 107 அதிகம்.

எதிர்க் கட்சியே உருப்பெருத மைசூர் மாநிலத்தில்கூட காங்கிரசுக் கட்சிக்கு எதிராக 16,977 வாக்குகள் பதிவாகிறது என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல் வெற்றிக் களிப்பில் துள்ளும் தமிழகக் காங்கிரசுக் கட்சியினர், அசாம் மாநிலத்தில் சென்ற வாரம நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு தோல்வியுற்றதை மறந்திருககமாட்டார்கள் என்று நம்புகிரேம்.

அது மட்டுமல்ல ; மைசூர் மாநில பெல்தங்காடி தொகுதியில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 53,667 என்பதையும், பதிவான வாக்குகள் 34,714 மட்டுமே என்பதையும் சிந்தையில் நிறுத்திப் பார்ப்பார்களேயானுல், இவ்வளவு பெரிய மகிழ்ச்சி கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிரேம்.

சென்ற முறையும்கூட இத்தொகுதியில் காங்கிரசுக் கட்சிதான் வெற்றிபெற்றது என்பதை மறந்திருக்கமாட்டார்கள். அபபடியிருக்க, ஏதோ தொடர்ந்து பலமுறை எதிர்க் கட்சியின் கையில் இருந்த இடத்தை பெரும் முயற்சி செய்து தற்பொழுது கைப்பற்றிவிட்டதைப்போல் 'களிமயக்கத்தில்' ஆழ்ந்திருக்கும காங்கிரசுத் தோழர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக! மிகமிக அற்பமகிழ்ச்சியை, அகமகிழ்வோடு அவர்தம் தலைவர் குழாத்துடன் கொண்டாடி களைப்பாறுவார்களாக!

—கா. க.

## ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (5)

[எஸ். ஆர்.]

# புகையும் பாறை--- கிராமிய இங்கிலாந்து!

முதல் நாள் மாலையே பார்த்திருக்க வேண்டிய 'ஒகனேக்கல்' பயணத்தை மறுநாள் காலைதான் கவனிக்க முடிந்தது. சுற்றுலாவின் இரண்டாம் நாள் முடிவிலேயே அத்துணைக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

ஆனுல், 'ஒகனேக்கல்' பகுதியைப் பார்த்த பின்னர்தான், 'காலதாமதம் என்பதற்காகத் தள்ளிவிட்டுச் சென்றிருந்தால் எத்துணை நட்டம் ஏற்பட்டிருக்கும்' என்பது புரிந்தது.

தருமபுரி மாவட்டத்துக்குக் காவிரியின் 'கடைக் கண்' வீச்சு மட்டுமே கிடைத்திருக்கிறது. தோன்றி மறையும் மின்னலைப்போல், மாவட்டத்தின் மண்ணை மிதித்துவிட்டு, பின், வேறு பக்கம் பாய்கிருள் அன்னை காவிரி!

அப்படித் தோன்றி மறையும் இடம்தான் 'ஒகனேக்கல்'!

கூப்பிடும் தூரத்தில் மைசூர் மாநில எல்லை ஆரம்பமாகிறது. நூறு அல்லது நூற்றிருபது அடி பள்ளத்தில் பாறைகளுக்கு இடையே வீழும் காவிரியின் நீர்த் துளிகள் சிதறி, மைசூர் மண்ணின் பகுதியையும் நனைக்கிறது. காடுகளும் மலைகளும் சூழ்ந்த அந்தப் பகுதியில் தவழ்ந்து வந்து -- பின்னர் நீர் வீழ்ச்சியாக மாறி -- இரைச்சலில் ஓர் அழகையும், பயங்கரத்தில் ஒரு கவர்ச்சியையும் கொடுத்து -- வான வில்லின் வண்ணங்களை ஆங்காங்கே தோற்றுவித்து -- பின், ஆருக மறுபடியும் ஓடும் காவிரியிள் பயணம், ஒகனேக்கல் பகுதியில் காண்பவரின் சிந்தையைப் பறிகொடுக்க வைக்கிறது! நீர் வீழ்ச்சியிலிருந்து தெறிக்கும் திவலைகள் உயரே எழும்பி புகைபோல் தெரிவதால், 'புகையும் பாறை' என்ற கன்னடச் சொல்லுக்கு இலக்காகி நிற்கிறது -- இந்த இடம். வான வில்லின் வண்ணங்களைக் கொடுத்து நிற்கும் பாறைப் பகுதிகளைவிட்டுத் திரும்புமுன், நாம், பாதியளவு நனைந்துவிடுகிரேம் ; பல ஆயிரக்கணக்கான பன்னீர்த் துளிகள் நம்மீது சிதறி வீழ்ந்ததுபோன்ற உணர்ச்சிதான் நமக்குக் கிட்டுகிறது!

'ஒகனேக்கல்'லைப் பார்க்காதவர்களுக்கு இது நல்ல விருந்து! ஆனுல், நீர் வீழ்ச்சியைப் பார்த்தவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை அதனைப் பார்க்கத் தெவிட்டவில்லை!

செய்தியாளர்கள் சென்றது, வெறும் 'சுற்றுலா' என்ற நோக்கத்துக்காக மட்டுமலல ; திட்டத்தில் இருந்துவரும ஒகனேக்கல் நீர் மின்சாரத் திட்ட 'மாதிரிப் பகுதி'க்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டபோதுதான், பத்திரிகையாளர்களுக்கென்றே இப்படி வேறு ஒரு 'விருந்து' இருப்பது ஒரு சிலருக்குத் தெரிய வந்தது.

ஒரு சுற்றுலா இடமாகவே இருக்கும் 'ஒகனேக்கல்', தமிழகத்துக்கு மட்டுமல்ல -- தென்னகத்துக்கே வழங்கக்கூடிய ஒரு நீர் மின்சாரத் திட்டமாக மாறக்கூடிய 'மாதிரிப் பகுதி' என்பது தொடர்புள்ள பொறியியல் வல்லுநர்களால் செய்தியாளர்களுக்கு விளக்கிக் காண்பிக்கப் பட்டபோது தெரியவந்தது.

ஒகனேக்கலுக்கு சற்று மேலே காவிரி நீர்ப் பகுதியில், கன்னட -- தமிழக எல்லைகள் துவங்குகின்றன.

'ஆடு தாண்டும் காவிரி' என அழைக்கப்படும் மிகக் குறுகிய இடைவெளியில், அன்னை காவிரி பாய்ந்து செல்லும் இடமும் இந்தப் பகுதியில்தான். குன்றுகளுக்கிடையே நிறுவப்படும் இரண்டு அணைகளின் மூலம் வீணுக வேகத்துடன் ஓடும் நீரோட்டத்தைத் தடுத்து நீர் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒரு திட்டத்தினை முன்னைய அரசே தயாரித்திருந்தும், அது இன்னும் நடைமுறைக்கு வராதது, 'மாநில சிக்கல்' என்ற -- இந்தியாவுக்கே உரிய -- 'அரசியல் வியாதி'யால்தான் என்பது தெரியவந்தது!

தடுத்து நிறுத்தப்படும் நீர், தமிழகத்தின் பாசனத்துக்குச் சிறு துளியும் பயன்படுத்தப்படாமல் -- அளவு குறையாமல் -- அதேபோது மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு மட்டும் பயன்படும் என்பது மைசூருக்கு உணர்த்தப்பட்டிருந்தும்கூட, திட்டம் ஏட்டளவில் மட்டுமே இருக்கிறது!

ஹேமாவதி திட்டத்தில் மைசூருடன் பேச்சு வார்த்தை நடத்தி வெற்றி கண்ட கழக அரசு, ஒகனேக்கல் நீர் மின்சாரத் திட்டத்திலும் கன்னட மாநிலத்தின் ஒப்புதலைப் பெற, மத்திய அரசின் குறுக்கீட்டினை மிகவும் எதிர்பார்க்கிறது.

இந்த நீர் மின்சாரத் திட்டம் நடைமுறைக்கு வந்தால், தென்னகத்துக்கென்ற ஒரு பொதுவான 'மின்சாரக் கிரிட்'டினை உருவாக்க வேண்டும் என்ற முயற்சிக்கு, மாபெரும் பக்க பலமாக அது அமையும் என்றும் எங்களுக்கு விளக்கப்பட்டது.

'தளர்ந்த பெடரல் ஆட்சி முறை கூடாது ; இன்னும் பலம் பொருந்திய மத்திய அரசுதான் வேண்டும்' என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கும் காங்கிரசுக் கட்சி, டில்லி—சென்னை—மைசூர் ஆகிய மூன்று இடங்களிலும் ஆட்சியில் இருந்தபோதே தமிழகத்தையும் -- கன்னடத்தையும் இணைக்கின்ற இத்திட்டம் செயல் வடிவம் பெருததில் உள்ள பின்னணி நிலைதான், 1967-க்குப பின்னரும் நீடிக்கிறது.

**"மாநிலங்களை இணைக்கும் அல்லது இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான இதுபோன்ற திட்டங்களை, முழு நேரமும் -- விரைவாகக் கவனித்து ஆவன செய்வதற்கென்றே மத்திய அரசு ஒரு தனி இலாகாவினையே அமைத்தால் என்ன" என்ற எண்ணம்தான் மேலிடுகிறது.**

**இரு மாநிலங்களைத் தொடர்புபடுத்துகிறது என்பதால், இன்னும் முழுமை பெற வேண்டிய கோவை மாவட்டம் பரம்பிக்குளம் திட்டத்தினையும் பின்பு எங்கள் குழு பார்க்க நேர்ந்தபோது, மேற்கண்ட எண்ணம் இன்னும் வலிமை பெற்றது!**

தற்போதைய அளவில் சுமார் ரூ. 30 கோடி பெறுமான ஒகனேக்கல் நீர் மின்சாரத் திட்டம்

(3-ம் பக்கம் பார்க்க)

# எகிப்து நாட்டில் சத்தியவாணிமுத்து

## அமைச்சரைச் சந்தித்தார்

கெய்ரோ, நவ. 22—

தமிழக செய்தி -- சமூக நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், எகிப்து சமூக நலத் துறை அமைச்சர் அபீஸ் பாதாவியைச் சந்தித்துப் பேசினுர்.

சமூக நல -- மருத்துவ நிலையங்களைப் பார்வையிட்டார்.

இந்தியாவிலும் எகிப்திலும் திரைப்படத் தொழில் வளர்ச்சி பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடினுர்.

பண்டைய பரோவா மன்னர்கள் நகரான லக்காருக்கும் -- தமிழகத்திலுள்ள பண்டைய நகரங்களுக்குமிடையில் கலைத் தொடர்புக்கு உதவுவதாக அமைச்சர் சத்தியவாணிமுத்து உறுதி கூறினுர்.

# ரூ. 62 கோடி செலவில் உர ஆலை

## பட்நாயக்கின் கலிங்கா நிறுவனத்துடன் பஞ்சாப் அரசு ஒப்பந்தமாம்

### இந்தியாவிலேயே இதுதான் மிகப் பெரியதாம்

சாந்திகார், நவ. 23—

ரூ. 62 கோடி முதலீட்டில் உர ஆலை ஒன்றை அமைப்பதற்கு பஞ்சாப் மாநில அரசு, கலிங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டிருக்கிறது.

கலிங்கா நிறுவனம் ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சரும் ஊழல் புகார்கள் பல சுமத்தப்பட்டவருமான வி. பட்நாயக்குக்குக் சொந்தமானதாகும்.

இது அமைக்கப்பட்டால் இந்தியாவிலேயே இதுதான் மிகப் பெரிய உர ஆலையாக இருக்கும்.

மேற்கு ஜெர்மனியின் ஒத்துழைப்புடன் அமையவிருக்கும் இந்த ஆலையில் ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் டன் உரம் உற்பத்தி செய்யப்படுமாம்.

இது குறித்து விளக்கமளித்த பட்நாயக், இங்கு தயாரிக்கப்படும் உரம்--பஞ்சாப், அரியானா, இமாசலப் பிரதேசம், மேற்கு உத்தரப் பிரதேசம், இராஜஸ்தானின் கங்கா நகர்ப் பகுதி ஆகியவைகளுக்கு மிகப் பொருத்தமானதாகும் என்று குறிப்பிட்டார்.

---

# கைத்தறித் துணிகட்குத் தள்ளுபடி

## தமிழக அரசு மறு ஆய்வு செய்யும்

### அமைச்சர் மா. முத்துசாமி தகவல்

சென்னை, நவ. 22—

"கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி தருவது சம்பந்தமாக மறுபரிசீலனை செய்து புதுத் திட்டம் வகுக்கலாமா என்பது குறித்து மாநில அரசு மறு ஆய்வு செய்து வருகிறது.

"தள்ளுபடி தரப்படுவதால் கிடைக்கும் பலன் தங்களுக்குக் கிடைக்காமல், அதனை வேறு எவரோ அனுபவிக்கின்றனர் என்று கைத்தறி நெசவாளர்கள், அரசிடம் கடுமையாக முறையிடுகின்றனர்.

"ஏனைய மாநிலங்களிலிருந்துவரும் துணிப் போட்டியைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாததுதான் கோவை மாவட்டத்தில் நூற்பாலைகள் மூடப்பட்டதற்குக் காரணமாகும்"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், மேற்கு சென்னை சில்லறைத் துணிக் கடைக்காரர்கள் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டுக்கு மத்திய அரசுதான் பொறுப்பு. அதன் பற்ருக்குறை நிதி முறையின் விளைவாக பணவீக்கம் ஏற்பட்டு, பொருளாதாரம் சீர்குலைந்தது

"பழைய அரசுகளின் தவற்ருல், சென்னையில் அதிக நெசவு ஆலைகள் இல்லாமல் நூற்பு ஆலைகளே இருக்கின்றன. உரிய நேரத்தில் இதுபற்றி மத்திய அரசிடம் காங்கிரசார் எடுத்துரைத்திருந்தால், மாநிலத்தில் பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும்.

"அண்டை மாநிலங்களில் விசைத் தறிகள் ஏற்பட்டதால், சமமற்ற போட்டி ஏற்பட்டு, தமிழகத்தில் கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டது.

"மாநிலப் பொருளாதாரம் நளிவடைவற்கு தி. மு. க. அரசு மீது பழிசுமத்தலாகாது."

விழாவில் மேயர் வேலூர் நாராயணன், க. அறிவழகன் எம்.எல்.சி., கே. சுப்பிரமணியன், எம். நடராசன் ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர்.

---

# பர்மாவிலிருந்து வெளியேறியவர்கள்

## சொத்து மதிப்புப்பற்றி 2,000 கோரிக்கைகள்

புதுடில்லி, நவ. 22—

"இந்த ஆண்டு ஆகஸ்டு—அக்டோபருக்கிடையில் 5,470 இந்தியர்கள் பர்மாவிலிருந்து இந்தியா வந்துள்ளனர்"

என்ற தகவலை வெளிவிவகாரத் துறை இணை அமைச்சர் பகத், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பர்மாவைவிட்டு வெளியேறியவர்கள் விட்டுச்சென்ற சொத்து மதிப்பு திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை; ஆனல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 2,000 ஆகும்.

"பர்மா அரசினரால் இவர்களின் கோரிக்கை பற்றி ஆராய பட்ட குழு, தனது பணியை முடிக்கவில்லை."

---

# வேலை நிறுத்தங்களைத் தடை செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லையாம்

புதுடில்லி நவ. 22—

"பல்வேறு இன்றியமையாத் தொழில் நிறுவனங்களில் வேலைநிறுத்தங்களை நிரந்தரமாகத் தடை செய்யும் யோசனை அரசுக்கு இல்லை"

என்று தொழிலாளர் நல அமைச்சர் ஹாத்தி, மக்களவையில் அறிவித்தார்.

"நிலக்கரிச் சுரங்கம் இருப்பதனுல் ஜாரியா எனும் நகருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதிருக்குமாறு எல்லாவிதமான தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது" என அவர் வேருெரு உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளித்தார்.

---

# 51 தேர்தல் வழக்குகள்

## இன்னும் முடிவுறவில்லை

புதுடில்லி, நவ. 22—

"நாட்டின் பல உயர் நீதிமன்றங்களிலுமாக 51 தேர்தல் வழக்குகள் இன்னமும் முடிவுருமல் இருக்கின்றன"

என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்குகள் ஜம்மு--காஷ்மீரில் 22; உ. பி.-யில் 17; ம. பி.-யில் 6; பீகாரில் 2; இராஜஸ்தானில் 2; மைசூரில் 1; மணிப்பூரில் 1—என்ற அளவில் இருக்கிறது.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேறுவது, மின்சார உற்பத்தியைப் பல மடங்கு அதிகரிக்கச் செய்யும் என்பது மட்டுமல்ல -- பொறியியல் பட்டதாரிகளிடையே மலிந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மிகப் பெரிய அளவுக்கு விடுவிக்கும் என்பதும் தெரியவருகிறது.

ஒகனேக்கல் அருகிலேயே உள்ள தேனீ வளர்ப்பு நிலையத்தினர் தந்த தேன் கலந்த தண்ணீர் எங்களுக்குத் தரப்பட்டபோது, 'நீர் மின்சாரத் திட்டம் பற்றிய அந்த இனிப்புச் செய்தியும் விரைவில் வரட்டும்' என்ற வேட்கைதான் அனைவரது உள்ளத்திலும் எழுந்தது.

★

கழக அமைச்சரவை பதவியேற்ற புதிதில் அறிஞர் அண்ணா அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் நடந்த கூட்டம் ஒன்றில், 'கால்நடைகள்' செல்வமாகக் கருதப்பட வேண்டியது ஏன் என்பதற்கு வெளிநாட்டு உதாரணம் ஒன்றைக் கூறி விளக்கிப் பேசியதுதான், ஒசூர் கால்நடைப் பண்ணையைப் பார்த்தபோது நினைவுக்கு வந்தது.

புல் வளர பசு வளரும்—
பசு வளர பால் பெருகும்—
பால் பெருக நம் தரம் உயரும்!

★

**"இன்றையக் கன்றே நாளைய மாடு ---
கன்றைக் கவனித்து வளர்க்க வேண்டும்"**

என்ற இரண்டு 'புதிய மொழிகள்' -- ஒசூர் கால்நடைப் பண்ணை நிர்வாகிகளின் திறமைக்கு எடுத்துக்காட்டாக -- சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய பகுதிகளின் சிற்சில இடங்கள் சேர்ந்த பழைய சென்னை மாநிலத்திலேயே மிகப் பெரியதும் பழையதுமான ஒசூர் கால்நடைப் பண்ணை, இன்று பல்வேறு பண்ணைகளின் 'தாய்ப் பண்ணை'யாக விளங்குகிறது.

தூய நெய், கறந்த பால், குளிர்ந்த நீர் -- இவை மூன்றும் 1,646 ஏக்கர் பரப்புள்ள இந்தத் தனி உலகில் புகழ் பெற்றவை என்பதை, நாங்கள் அங்கு சென்ற சில நிமிடங்களுக்குள்ளேயே உணர்ந்து கொண்டோம்.

கடல் மட்டத்துச்கு மேல் சராசரி 3,000 அடி உயரமுள்ள இந்தப் பண்ணையின் பின்னணி, 'இயற்கை அழகோ' என்று வியக்க வைக்கிறது! ஆனல், அத்துணையும் அன்ருட உழைப்பின் மூலம் அவ்வளவு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது!

சுமார் 15 வகை பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இந்தப் பண்ணையின் புல் வளரும் நிலங்களைக் கூட இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல் தோன்றுகிறது!

வெளி இடங்களில் நாம் பார்த்து அருவருக்கும் பன்றிக் கூட்டங்கள், இங்கே பார்வைக்கு அழகாய் -- சொகுசான வாழ்க்கை நடத்துகின்றன!

இருளைக் கொடுக்கும் மர நிழல் --- வனப்புமிக்க வாய்க்கால் வரப்புகள் --- கால்நடைத் தீவனங்களுக்கான தாவரங்களைக் கொடுக்கும் வயல் வெளிகள் --- இதுபோன்ற காட்சிகளை எங்கோ நிழற் படம் -- திரைப் படங்கள் மூலம் பார்த்ததுபோன்று ஓர் உணர்வு மேலிடுகிறது!

குறுகிய நேரத்திலும் பண்ணையைப்பற்றி -- ஓடும் பஸ்ஸில் இருந்தபடியே -- விளக்கம் கொடுத்து வந்த டாக்டர் சேதுராமன், இது ஒரு 'கிராமிய இங்கிலாந்து' (Rural England) எனப் பெயர் பெற்றுள்ளது.

நல்ல இன கால்நடைச் செல்வங்களை மட்டுமல்ல -- கால்நடை மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கும் இது ஒரு கல்விக்கூடமாகத் திகழ்கிறது!

மாவட்ட ஆட்சியாளர் விவரித்த 'களி -- புளி -- கம்பளி' நினைவு—ஒசூரின் இயற்கை அமைப்பு குறிப்பாக அங்கே உள்ள கால்நடைப் பண்ணையின் வனப்பு ஆகியவைகளைக் கண்டபோது—எங்கள் மனதிலிருந்து முற்றிலும் மறைந்தது!

மலைவாழ் பகுதிக்கு ஈடு கொடுக்கக்கூடிய ஒசூர் பகுதியின் சாதக நிலைதான், பட்டு உற்பத்தியிலும் அது ஓர் எடுத்துக்காட்டான இடத்தைப பெறுவதற்குக் காரணமாக இருக்கிறது!

முன்பு தமிழகத்துடன் இருந்த 'கொள்ளேகால்' மைசூருடன் இணைந்தபிறகு, பட்டு உற்பத்தியில் நிலவிய குறையைப் போக்கி இருப்பது இந்தப் பகுதிதான்!

சின்னஞ் சிறுவர்களும், இல்லத்து மகளிரும் ஓய்வு வேளையில் ஈடுபடும் இத்தொழில், திறமைக்கும் வருவாய்க்கும் வழிவகுக்கும் வகையில் இருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் மொத்தமாக 446 ஏக்கரில் இத்தொழிலுக்குத் தேவையான முசுக்கட்டை பயிராகிறது. சுமார் 500 குடும்பங்கள், சிறப்புமிக்க இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன.

பட்டு நூலினுலான மணம் இல்லாத --- ஆனல் வனபபு உள்ள --- மலர் ஒன்றினைத் தந்து பத்திரிகையாளர்களை வரவேற்ற ஒசூர் அரசினர் பட்டு உற்பத்திப் பண்ணையில், நூலிழைகளை உருவாக்கிய சிறுவர்களின் கைத்திறன், எங்களை வியப்பில் ஆழ்த்தியது. பத்துப் பதினைந்து பட்டுப் புழுக் கூடுகளிலிருந்து நூல்களைக் கொய்து இழையோட்டும் அவர்களது திறமையினை, கண் இமைக்காமல் கூர்ந்து பார்த்தால் கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை!



ஒகனேக்கல் நீர் வீழ்ச்சிப் பகுதியில் செய்தியாளர் குழு

★

பார்த்த இடங்களாலும் சரி -- நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் முடித்துக் கொடுத்த தொடர்புள்ளவர்களின் பண்புமிக்க உபசரிப்புகளினுலும் சரி -- தர்மபுரி மொத்தமாக செய்தியாளர்களை வெகுவாகக் கவர்ந்த மாவட்டமாக மாறிவிட்டது!

'பிரிந்த மாவட்டம் -- பின்தங்கிய மாவட்டம்' என்று எதையுமே எதிர்பாராது போய் பின்னர் செய்திக்கும் சிந்தனைக்கும் நிறையத் தகவல்கள் கிடைத்ததுதான், எங்கள் மன நிறைவுக்கு முக்கியக் காரணமாக இருக்கலாம்.

நீர்ப்பாசன வசதிகள் -- அது, சின்னறு போன்ற நீர்த் தேக்கத் திட்டங்கள் மூலமாகவோ அல்லது சலுகைகளுடன்கூடிய மினசார வினியோகம் மூலமாகவோ—நிறையக் கிடைக்க வேண்டுமென்பது, இம்மாவட்டத்து மக்களின் முக்கியக் கோரிக்னகயாகும் என செய்தியாளர்களிடம் பேசிய கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரிவேங்கடம், இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டார்; அது, 'தர்மபுரி மாவட்டத்தில் ஒரு முன்னேற்ட மண் வள ஆராய்ச்சி நடத்த வேண்டும்' என்ற கோரிக்கையாகும்.

எங்கள் குழுவினரைப் பொறுத்தவரையில், அது ஓர் உடனடித் தேவை என்றே தோன்றியது.

இயற்கை அமைப்பினுலும், மண் தரத்தினுலும் தருமபுரி பல்வேறு சிறப்புக்களைப் பெற்றிருக்கிறது. நீர் வசதி இருந்தால் மாநிலத்துக்கே

(4-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பெருமை தரும் காய், கனி' பயிர் வகைகளை இந்த மாவட்டம் உற்பத்தி செய்யும் என்ற நம்பிக்கை பரவலாக இப்பகுதியில் இருக்கிறது.

எதிர்காலத்தில், 'ஏன் இப்பகுதி நம்மிடமிருந்து பிரிந்தது' எனச் சேலம் மாவட்டத்துக்காரர்களே பார்த்துப் பொருமைப்படத்தக்க அளவுக்குத் தருமபுரி ஏற்றம் பெறும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய இங்கு தெரிகின்றன !

# தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கு உதவி

## உலக பாங்கி தலைவர் தரும் உறுதி

### தேவைகளை கேட்டறிவதில் கவனம் செலுத்தினர்

### அரசு அதிகாரிகளுடன் நீண்ட நேரம் ஆலோசனை

சென்னை, நவ. 22—

"தமிழகத்தின் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு உலக பாங்கியினால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு உதவியையும் செய்ய முயற்சிக்கப்படும்" என்று உலக பாங்கித் தலைவர் மக்நமாரா உறுதி கூறினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில், மாநில அரசு அதிகாரிகளுடன் அவர் ஒன்றரைமணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

உலக பாங்கியின் தலைவருடன் ஆலோசனை முடிந்த பிறகு தலைமைச் செயலாளர் திரு. இராமகிருட்டினன், செய்தியாளர்களைச் சந்தித்து மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

"உலக பாங்கியின் உதவியையும் ஏற்கக்கூடிய வகையில், இந்நாட்டில் 'நிர்வாகத் திறன்' வளர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பொதுவாக அறிந்துகொள்வதே அவருடைய வருகையின் நோக்கமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழக அரசின் தேவைகளை அறிந்துகொள்வதுதான் அதிகாரிகளுடன் அவர் நடத்திய பேச்சின் மையக் கருத்தாக இருந்தது.

இந்நாட்டுக்கு அளிக்கப்பட்ட உலக பாங்கி உதவிகள் சிறந்த அளவுக்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கேட்டறிவதும் -- அதை மதிப்பிடுவதும்தான் மக்நமாராவின் முக்கிய அக்கறையாக இருந்தது" என்றும் தலைமைச் செயலாளர் கூறினர்.

#### வேளாண்மை வளர்ச்சி

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மக்நமாராவுக்கு அதிகாரிகள் விவரமாக விளக்கினர்; வருங்காலப் பிரச்சினைகளையும் எடுத்துரைத்தனர்.

குழாய்க் கிணறுகளை ஏராளமாக அமைப்பதன் அவசியம் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது; இதன் விளைவாக, குழாய்க் கிணறுகளைத் துரிதமாக எடுப்பதற்காக இன்னும் அதிகமான விசைத் துரப்பணக் கருவிகள் தேவைப்படுகின்றன; மற்றும் இயந்திரக் கருவிகளை கொண்டு வருவதற்கு அந்நிய நாணயச் செலாவணி தேவைப்படுவதையும் விளக்கினர்.

#### கவனத்துடன் கேட்டறிந்தார்

நான்காவது திட்டத்தில் வேளாண்மைத் துறை உற்பத்தி இலக்குகளை மக்நமாரா கேட்டறிந்தார்; அவருக்கு விளக்கப்பட்டவற்றிலும் உன்னிப்புடன் கவனம் செலுத்தினர்.

கட்டாய நடவடிக்கைகளுக்கு இடமில்லாமல் மாணவர்கள், பள்ளிகளுக்கு வருவதற்கான ஊக்கத்தை உண்டாக்கும் மதிய உணவுத் திட்டத்தில் தனி அக்கறை காட்டினர்; அத்திட்டத்தை பாராட்டவும் செய்தார். இம்மதிய உணவுத் திட்டத்துக்காகும் செலவில் 20 சதவிகிதம் 'கேர்' நிறுவனம் ஏற்பதைப் பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்.

#### சேலம் உருக்காலை

சேலம் உருக்காலை அமைப்பதில் மாநில அரசுக்குள்ள ஆர்வம் அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது; அதன் நோக்கங்களும் விளக்கப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும் அவருக்கு விளக்கப்பட்டது.

#### மாநகரின் தேவை

மேயர் வேலூர் நாராயணன், மாநகராட்சி தி.மு க. கட்சித் தலைவர் வி. முனுசாமி, ஆணையர் அம்பாசங்கர் ஆகியோர் ஆலோசனைகளில் கலந்துகொண்டனர்; மாநகராட்சியின் தேவைகள் அவருக்குத் தெரிவிக்கப்பட்டன. நகரத்தில் போக்குவரத்து அதிகரித்து வருவதால், 'அதிவேக சாலைகள்' அமைப்பது முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. நகர வீதிகளில் நல்ல வெளிச்சம் போடுவதும் அவசியம் என்றும் கூறப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், திட்ட ஆலோசகர், சுகாதார -- கல்வி -- தொழில் -- தொழிலாளர் நல--நிதி -- வீட்டு வசதித் துறைகளின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# 'தமிழ்நாடு வகுத்துள்ள திட்டங்கள் ஆர்வத்தைத் தரக்கூடியவை'

## 'மக்களின் தூய்மைமிக்க உணர்வு என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது'

### 'இங்குள்ள மக்களிடம் ஒழுக்கம் நிலவுகிறது'--- உலக பாங்கித் தலைவர் மக்நமாரா பெருமிதம்

சென்னை, நவ. 22—

"சென்னை மக்களிடையே உணர்வும், வாழ்க்கையை அனுபவிப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வமும், அவர்களது தூய்மை உணர்ச்சியும் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது; இதைப் பற்றி முன்பே நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; நேரில் கண்கூடாகப் பார்த்தவை இதை உறுதி செய்திருக்கிறது.

"இந்த ஆர்வம், தமிழக மக்களின் வாழ்விலும், எதிர்காலத்துக்காக அவர்கள் வகுத்துள்ள திட்டங்களிலும் தென்படுகின்றன ! இங்குள்ளவர்கள் பிற பகுதியிலுள்ளவர்களைவிட மாறுபட்டிருப்பதைக் கண்டேன்; சென்னை மக்களிடை நான் பழகியது, மனநிறைவூட்டும் அனுபவமாக விளங்கியது"

இவ்வாறு உலக பாங்கியின் தலைவர் மக்நமாரா, சென்னையிலிருந்து புறப்படுமுன் செய்தியாளர்களிடம் பெருமிதமுடன் கூறினர்.

சென்னையிலிருந்து புறப்படுவதற்குமுன் அவர், முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்தார்; 'இங்கு காணப்படும் சூழ்நிலை என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது' என்று அவரிடம் கூறினர்.

இங்குள்ள அதிகாரிகள் திறமையை அவர் பாராட்டினர்; 'உங்களிடம் நேர்த்தியான உன்னதமிக்க இளைஞர்கள் உள்ளனர்; நான் போய்ப் பார்த்த வேறு சில இடங்களைவிட இங்குள்ள மக்களிடம் அதிக ஒழுங்கு காணப்படுகிறது. இங்குள்ளவர்கள் சுத்தமாகவும், சுறுசுறுப்பாகவும் உள்ளனர்' என்று அவர் குறிப்பிட்டார்.

#### அண்ணா அளித்த பரிசு

நுங்கம்பாக்கத்தில் முதலமைச்சரைச் சந்தித்த மக்நமாராவுக்கு வெண்கலத்தாலான நடராசர் சிலை ஒன்றையும், திருமதி மக்நமாராவுக்குக் காஞ்சீபுரம் பட்டுச் சேலை ஒன்றையும் அண்ணா அவர்கள் பரிசாக அளித்தார்.

## சென்னை 80-வது வட்டத்தில் உணவு வழங்கு விழா

24—11—68 பகல் 12-மணியளவில் 80-வது வட்ட தி. மு. க. பணிமனையில் (டாக்டர் நடேசன் ரோடு 1-வது சாலையில்) -- வட்ட கைவண்டி காய்கறி வியாபாரிகள் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பெற்று நாடு திரும்பியதை முன்னிட்டு 2,000 ஏழைகளுக்கு உணவளிக்கும் விழா நடைபெறும்; தலைவர்: ஜே. எஸ். ஸ்டாலின்; உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்., கே. ஏ. கிருட்டினசாமி எம்.ஏ., பி.எல், முரசொலி மாறன் எம்.ஏ., கோவை செழியன், எஸ். ஆனந்தன், டி. குப்புசாமி ஆகியோர் முன்னிலையில் உணவு வழங்குவார்.

## நடக்க இருப்பவை -- பொதுக்கூட்டங்கள்

### 24--11--68

#### சென்னை 24-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் சு. மோகன்ராசு எம்.சி. அவர்களுக்குப் பாராட்டு; இரவு 8-மணிக்கு வீராக்குட்டி தெருவில் (மணிகூண்டு அருகில்); தலைவர்: இ. நரசிம்மலு; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், வி. பி. சிந்தன், க. ஆறுமுகம், கே. எம். தீனதயாளன், பி. ஜி. மாரியப்பன், து. வேணுகோபால், ந. சு. மணி, நடிகர்கள் எம்.ஆர்.ஆர். வாசு, ஆனந்தன்.

#### சைதைப் பகுதி

தி. மு. க. சார்பில் மேயர், துணை மேயருக்குப் பாராட்டு; மாலை 7-மணிக்கு கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில்; தலைவர்: செ. கண்ணப்பன்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, காஞ்சி மணிமொழியார், நீலநாராயணன், சைதை சம்பந்தம், மாநகராட்சி உறுப்பினர்கள் சா. கணேசன், சோ. கி. மூர்த்தி, ஆர். டி. பாஸ்கரன், கோ. ஐயாவு, சி. வி. சிட்டிபாபு, செ. மோகனப்பா, ஸ்ரீதரன், மற்றும் எஸ். பி. இரத்தினம், தேவநாதன்.

#### மதுரை 31-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கூடலழகிய பெருமாள் கோவில் திடலில்; தலைவர்: சி. நடராசன்; பேசுவோர்: டி. கே. சீனிவாசன், எஸ். முத்து எம்.எல்.சி., சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ. கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., சொ. காவேரிமணியம் பி.எஸ்சி.,பி.எஎ., டி. ஆர். இராசன் பி.ஏ.பி.எல்., கூடலரசன், எஸ். துரைபாண்டி எம்.சி., ஆ. மாரியப்பன், மு. விவேகானந்தன், வெ. சோமசுந்தரம், மா. தங்கவேலு, தி. இளங்கோவன், செ. முருகேசன்.

#### கரூர்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மேட்டுத் தெரு அண்ணா திடலில்; தலைவர்: பி. மாரியப்பன்; பேசுவோர்: கேரள சுந்தரம், என். ஆர். இராமசாமி, ;பரமத்தி சண்முகம், கே. ஜி. உமாகாந்தன், இரா. மாரிமுத்து, சி. ப. தேவராசன்.

### 25--11--68

#### காட்டூர் பி. நாட்டாமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோவில் அருகில்; தலைவர்: ஏ. சின்னப்பன்; பேசுவோர்: தி. பொன்னுமலை எம்.எல்.ஏ., கே. எஸ். அமிர்தம், கா. அ. பழனி, இரா. கந்தசாமி, சி. பி. முத்தழகன், பெ. இராசமாணிக்கம், சி. டி. தாஸ். (மணி – சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

#### பழனி

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: சொ. துரையரசன்; பேசுவோர்:; அமைச்சர் மா. முத்துசாமி, சி.டி. தண்டபாணி எம்.பி., என். நாச்சிமுத்து எம்.எல்.ஏ., கே. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.

#### நடுவூர்

தி. மு. க. துவக்க விழா; மாலை 5-மணிக்கு; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., செங்கல்வராயன், கோ. வெற்றிவீரன், பி. அமீது, ஆரோக்கியநாதன், க. செயராமன், எஸ். சோசப், எஸ். ஆரோக்கியசாமி, அ. கோதண்டன், மகமதலி.

## பெங்களூரில் சென்னை மேயருக்கு பாராட்டு விழா

பெங்களூர் -- இராஜாஜி நகரில் சென்னை மேயர் வேலூர் டி. நாராயணன் அவர்களுக்கு நவ. 24-ல் பாராட்டு விழா நடைபெறும்.

கூட்டத்திற்கு மினர்வா மில்ஸ் தொழிற்சங்க செயலாளர் பி. எஸ். இராமகிருஷ்ணன் தலைமை தாங்குவார்.

மேயர் அவர்கள் 24-ம் நாள் மாலை 6-15 மணிக்கு இலட்சுமி நாராயணபுரம் தி. மு. க. கிளையின் எதிரில் செயலாளர் மு. லோகநாதன் அவர்களின் 'வாணி கிளாஸ் ஒர்க்சை'த் திறந்து வைப்பார்.

மாலை 7-மணிக்கு பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுவார்.

வேளாண்மை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

### நிகழ்ச்சிகள்

நவ. 24: பிற்பகல் 3-15 மணி: பூவிருந்தவல்லி — கால்நடை மருத்துவமனைத் திறப்பு விழா; 3-30 மணி: ஊராட்சி ஒன்றிப்பு விவசாயக் கிடங்கு திறப்பு விழா; மாலை 4 மணி: கூட்டுறவு கால்நடைத் தீவன உற்பத்தி-விநியோக சங்கக் கட்டிடங்களைத் திறந்து -- தீவன உற்பத்தியைத் துவக்கிவைத்தல்.

## சேலம் மாவட்ட தி.மு.க. தேர்தல்

திரு. அன்பில் தருமலிங்கம் அவர்களைத் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராகக் கொண்டு 16—11—68-ல், சேலம் நகரில் நடைபெற்ற சேலம் மாவட்ட தி. மு. கழகத் தேர்தலில் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

**அவைத் தலைவர் :**
எஸ். எஸ். எம். சுப்பிரமணியம்

**செயலாளர் :**
ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.

**துணைச் செயலாளர்:**
எஸ். ஏ. அன்புக்கரசு

**பொருளாளர் :**
ந. நடேசன்

**பொதுக்குழு உறுப்பினர்கள் :**
எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ.
மா. முத்துசாமி பி.ஏ.பி.டி. (அமைச்சர்)
க. இராசாராம் பி ஏ, எம்.பி.
கன்னியப்பன் பி ஏ.பி.எல்.
ப. க. தமிழழகன்
நைனாமலை எம்.பி.பி.எஸ்.
கே. ஏ. தங்கவேலன்
அர்த்தனாரி
சுற்றூளி சுப்பிரமணியம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோவை பஞ்சாலை நெருக்கடியையும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்; அதுபற்றி அவர் கூறியதாவது :—

"இதற்கு உண்மையான காரணம், கிராமப் பகுதிகள் முன்னேற்றமடையாததே ஆகும்; கிராம மக்களின் வாங்கும் சக்தி மிகக் குறைவானதாகும்; இதனால் அம்மக்கள் பயன்படுத்தும் துணியின் சராசரி அளவும் குறைந்துவிடுகிறது. விவசாய வளர்ச்சியின்மூலம்தான் இந்நிலைமை சீர்படவேண்டும்."

கல்கத்தாவில், மக்நமாரா, 'கிராமப் பகுதி வருமானங்களுக்கு மேலும் வரி விதிக்கலாம்' என்ற யோசனை ஒன்றை வெளியிட்டிருந்தார்; இக்கருத்தை அண்ணா அவர்கள் ஆதரிக்கவில்லை: அவர் கூறியதாவது :—

**"மாநிலத்தின் எல்லா மாவட்டங்களும் ஒரே மாதிரி செழிப்புடன் இருப்பதில்லை. சில மாவட்டங்களில் நல்ல மகசூல் காரணமாக சிறிது கூடுதலான வருமானம் கிடைக்கக்கூடும்; இதற்கு வரி விதிப்பது கூடாது. இந்த வருமானத்தை அரசின் உதவியுடன் பாங்கிகள் பயன்படுத்தலாம்.**

**விவசாயிகள் தங்களது அதிக வருமானத்தை, நகரங்களுக்கு வந்து பண்டங்களை வாங்கியே செலவு செய்வர்; ஆகையால் இந்தப் பணம் தொழில் துறைக்குத்தான் வந்துசேரும்."**

## இலங்கை--- இந்திய நட்புறவுக் கருத்தரங்கு

உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் இலங்கை—இந்திய நட்புறவுக் கருத்தரங்கு, 24-11-68 காலை 9 மணியளவில் எழும்பூர் பெரியார் திடலில் நடைபெறும்.

இலங்கைத் தலைமையமைச்சர் இந்தியாவுக்கு வருகை தருவதையொட்டியும், இந்திய—இலங்கை நட்புறவு வலுப்பெறும் நோக்குடனும் இக்கருத்தரங்குக்கு 'நங்கூரம்' ஆசிரியர் இரா. சனார்த்தனம் எம்.ஏ., தலைமை தாங்குவார்.

திரு. ம. பொ. சிவஞானம், திரு. சி. பி. சிற்றரசு எம் எல் சி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், திரு. டி. கே. சீனிவாசன், நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., மைனா மோசஸ் எம்.சி, டி. கே. பகவதி 'விடுதலை' ஆசிரியர் வீரமணி, ஜெப்சங்கர், ஔவை நடராசன், 'கொத்தமங்கலம் சுப்பு, 'தீபம்' பார்த்தசாரதி ஆகியோர் கலந்துகொள்வர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.